முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1211

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

22.01.2023, ஞாயிற்றுக்கிழமை

1. அறமாக வாழுகின்ற அரங்கனே
அன்னதான சேவைஆற்றும் தேசிகனே
வரம் தந்து உன்னுள் ஆறுமுகன்யான்
வல்லமைபட ஆட்சி புரிகின்றேன்
2. புரியவே அரங்கன் உமக்கு ஞானஅறிவுரை ஆசி
புகலுவேன் சுபகிருது கலைதிங்கள் தன்னில்
பெருமைபட அரங்கன் தர்மத்தால்
பேருலகம் பாதுகாப்பு பெறுவது உறுதி
3. உறுதி தந்து அரங்கன் தருகின்ற
உயர்வான ஞான உபதேசத்தால்
கருதி வரும் மக்கள் அனைவருமே
கலியுகத்தில் ஞானிகளாவதும் உறுதிஉறுதி
4. உறுதி தந்தேன் இந்த பெரும்மாற்றத்தை
உயர்வாக அரங்கன் தொண்டர்களைக் கொண்டு
கருதி கருதி அரங்கன் திருவடி பற்றி
கனிவோடு தர்ம பாதுகாப்பு உலகுக்கு தந்து
5. தந்து வருகின்ற அன்பர்களைக் கொண்டே
தக்கபடி கலியுகத்தின் ஞானஆட்சி
சிந்தை வைத்து ஆறுமுகன்யான் இனிதே
சிறப்புற மாற்றம் செய்து அருள்புரிவேன்
6. அருளவே அரங்கன் தொண்டு வழிதான்
அகிலத்தில் அற்புதமாய் ஞானமாக
மகிழவே மக்களுக்கு வரமாக கிட்டி
மண்ணுலகம் மாற்றம் பெறுவது உறுதியப்பா
7. அப்பனே இன்னும் காலம் கடத்தா
அன்புள்ள உயர்வழி ஞானம் தேடி
இன்பமென மெய்ஞான பாதைக்கு
கலியுகத்தின் மேலான வழிதேடி அலைபவர்கள் எல்லாம்
8. எல்லோரும் ஓங்காரக்குடில் நோக்கி
இனிதே உடன்வந்து அரங்கனிடம்
வல்லமை தரும் ஞானதீட்சை அடைந்து
வாழ்க அரங்கனே தர்மனே என்று வாழ்த்தி
9. வாழ்த்தி உண்மைபட தர்மசேவையில்
ஒன்றிணைந்து தொண்டு ஆற்றிவர
வருகவே இந்த சக்தி அகிலமெங்கும்
வல்லமையாக பரவி அரங்கன் வழி

10. வழிதனில் ஞானஆட்சி அமைக்கும்
வடிவேலன்யான் வெளிப்பட உறுதுணை புரிவேன்
களங்கமற பிரணவக்குடில் நோக்கி
கலியுகத்தார் வருகவே இந்த ஞானசித்தி உறுதியாகும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–